# தேசிய மக்கள் சக்தி பதிவு செய்யப்பட்ட விதம் சட்டவிரோதம்! உண்மைகளை சரிபார்க்க உயர் நீதிமன்றம் அழைப்பாணை

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேசிய மக்கள் சக்தி பதிவு செய்யப்பட்ட விதம் சட்டவிரோதமானது என அறிவிக்கக் கோரி சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த மனுவின் உண்மைகளை சரிபார்க்க மார்ச் 4 ஆம் திகதி அழைப்பாணையை அனுப்ப உயர் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

அதன்படி பிரேத்தி பத்மன் சூரசேன, அச்சல வென்னப்பு மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு அங்கமான தேசிய மக்கள் சக்தி அரசியல் கட்சியாகப் பதிவு செய்திருப்பது சட்டத்திற்கு முற்றிலும் எதிரானது என நாகாநந்த கொடிதுவாக்கு மனுவில் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியலமைப்பின் 103(2) பிரிவின்படி, ஒரே கட்சியின் வெவ்வேறு கிளைகளை அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்வது தேர்தல் சட்டங்களுக்கு முரணானது எனவும், அதன் மூலம் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு அரசியலமைப்பு உத்தரவாதம் அளித்துள்ள உரிமையை மீறுவதும், முற்றிலும் சட்டத்திற்கு எதிரானதுமாகும் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)




# மாலைக்கதிர்
Maalaikkathir



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 09 புதன்கிழமை 21.02.2024 கதிர் 186


## மனோவின் பிள்ளையார் சுழி கதை நாடாளுமன்றில் கிண்டலடித்த ஜீவன்

"தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இந்த 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்திற்கு நான்தான் பிள்ளையார் சுழி போட்டேன் என ஒரு அறிக்கை விட்டிருந்தார். இதனைப் பிள்ளையார் கேட்டால் அவரே அழுவார். பெயர் போடும் அரசியல் செய்ய நான் வரவில்லை. நிரந்தரத் தீர்வுகளைப் பெறவே நான் அரசியலுக்கு வந்தேன்." - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் - வாங்கல்கள் சட்ட மூலம், நம்பிக்கை பொறுப்பு

2➤



## எழுச்சி பெறுகிறது தேசிய மக்கள் சக்தி

### பொன்சேகா சுட்டிக்காட்டு

"நாட்டில் கட்சிசாரா வாக்குகளில் (மிதக்கும் வாக்குகள்) 30 வீதம் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்குச் சென்றடைந்துள்ளது. இது பாரிய மாற்றமாகும்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

2➤



## முள்ளிக்கண்டல் சுட்டுக்கொலை சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் கைது

மன்னார் - அடம்பன், முள்ளிக்கண்டல் பகுதியில் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிலங்குளம் மற்றும் மன்னார் பகுதிகளைச்சேர்ந்த 33 மற்றும் 55 வயதையுடைய மேற்படி இருவரும் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் திகதி இந்த இரட்டைக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருந்தது.

துப்பாக்கிச்சூட்டில் மன்னார், நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் அருந்தவராஜா (வயது 42) மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஈச்சளவக்கை கிராமத்தைச் சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது 56) ஆகியோரே உயிரிழந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (அ)

## கச்சதீவு திருவிழாவில் பங்கேற்கமாட்டோம்! தமிழக வேர்க்கோடு பங்குத்தந்தை அறிவிப்பு!



இலங்கை - இந்தியா இருநாட்டு மீனவர்களும் கலந்து கொள்ளும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா மீனவர்களின் போராட்ட எதிரொலி காரணமாக இந்த ஆண்டு இந்திய தரப்பிலிருந்து எவரும் கலந்து கொள்ளப் போவதில்லை என தமிழக வேர்க்கோடு பங்குத்தந்தை சந்தியாகு அறிவித்துள்ளார்.

மேலும் வெளிமாவட்டம் வெளிமாநிலங்களில் இருந்து கச்சதீவு திருவிழாவிற்கு படகுகளில் செல்ல பதிவு செய்தவர்கள் வீண் சிரமங்களை தவிர்க்க வேண்டும் எனவும், அவர்கள் விசைப்படகிற்கு செலுத்திய பணம் விரைவில் மீண்டும் வழங்கப்படும் எனவும் பங்குத்தந்தை மேலும் தெரிவித்துள்ளார்.

## புத்தகங்களுக்கு 'வற்' வரி விதிப்பது யுனெஸ்கோ அமைப்பின் 'ஃபுளோரன்ஸ்' உடன்படிக்கையை மீறுவதாக அமைந்துள்ளது

### புத்தக வெளியீட்டாளர் சங்கத் தலைவர் சமந்த இந்தீவர தெரிவிப்பு

கல்வி, கலாசாரம், அறிவுசார் முன்னேற்றம் உள்ளிட்ட மக்களின் தனித்துவ அபிவிருத்திக்கு உதவும் புத்தகங்களுக்கு அரசாங்கம் விதித்துள்ள 18 வீத வற் வரியை இடைநிறுத்துமாறு இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த 'வற்' அறவிடலுக்கு புத்தக இறக்குமதியாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கல்வித்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வருவதுடன், ஐக்கிய ஐரோப்பிய மற்றும் சர்வதேச புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் இது குறித்தான தமது ஆட்சேபனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்த இந்தீவர தெரிவித்துள்ளார்.

உலகிலுள்ள அநேகமான நாடுகள் தமது மக்கள் தகவல்களை அறியவும், அறிவை பெருக்கவும் முயற்சிக்கும்போது அந்நாடுகள் அதற்கு உறுதுணையாக இருக்கின்ற அதேவேளை, இலங்கை அரசாங்கமோ வருமானத்தை அதிகரிப்பதாகக் கூறி இத்துறைக்கு வரி விதிப்பதும் அதன் கடுமையான பின் விளைவுகளை கவனத்திற் கொள்ளாமல் நடந்து கொள்வதுமானது முட்டையிடும் கோழியை கொல்வதற்கு சமமாகும் எனவும் சமந்த இந்தீவர குறிப்பிட்டுள்ளார்.

இத்தொழில்துறையானது ஏற்கனவே 1 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான வரியை அரசாங்கத்திற்கு செலுத்தி வருவதாகவும், பாடசாலை

2➤

## அத்தியாவசியப் பொருட்களுக்கான இறக்குமதி விசேடசரக்கு வரி உயர்வு!

அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றுக்கான இறக்குமதி விசேட சரக்கு வரியை உயர்த்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, உழுந்து, வெண்டைக்காய், கௌபி, சோளம், குரக்கன் மற்றும் தினை ஆகியவற்றின் இறக்குமதிக்கு உட்பட்ட விசேட பொருட்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அரிசி கிலோ ஒன்றுக்கு 200 ரூபாவாக இருந்த விசேட வர்த்தக வரி 300 ரூபாவாகவும், கௌபி மற்றும் தினை ஆகியவற்றின் இறக்குமதிக்கு கிலோவுக்கு 70 ரூபாவாக இருந்த விசேட வர்த்தக வரி 300 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ சோளத்திற்கு 25 ரூபா சரக்கு வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுடன், சோளம், உழுந்து இறக்குமதியை விவசாய அமைச்சின் பரிந்துரையின் பேரில் மேற்கொள்ள வேண்டும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

# மோட்டார் வண்டி தீக்கிரை

யாழ்ப்பாணம் – காரைநகர் பகுதியில் வாள்வெட்டு வன்முறை கும்பலொன் றினால் மோட்டார் வண்டியொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. காரைநகர் ஆலடிப் பகுதியில் நேற்று இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. வன்முறை கும்பல் தப்பிச் சென்றுள்ள நிலையில் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக பீட தொழிற் சந்தை



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழிற் சந்தை நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் திறந்துவைக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களின் தொழில்வாய்ப்புகளை அதிகரிக்கும் முகமாக யாழ். பல்கலைக்கழகத் தொழிற்துறைத் தொடர்பு மையம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து நடத்தும் இந்தத் தொழில் வாய்ப்பு சந்தை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொழில் வாய்ப்புச் சந்தையில் கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழில்நுட்பம், தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 43 தொழில் வழங்குநர்கள் கலந்துகொண்டனர்.

இதன்மூலம் சுமார் 800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## புத்தகங்களுக்கு ‘வற்’ வரி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடப் புத்தகங்கள் மற்றும் ஏனைய புத்தகங்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் 90 வீத மூலப்பொருட்களை இறக்குமதி செய்பவர்கள் செலுத்தும் வெற் வரி மூலமே இந்த வருமானத்தை அரசாங்கம் ஈட்டுவதாகவும் இந்திவர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வெற் அதிகரிப்பை மேற்கொள்வதன் மூலம் இலங்கை அரசாங்கமானது 1950 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட யுனெஸ்கோ அமைப்பின் ‘ஃபுளோரன்ஸ்‘ உடன்படிக்கையை மீறுவதாக அமைந்துள்ளதாகவும் இந்த உடன்படிக்கையில் இலங்கையும் கையொப்பமிட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

‘புளோரன்ஸ்’ உடன்படிக்கையின்படி இறக்குமதி செய்யப்படுகின்ற கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார பொருட்களுக்கு சுங்க வரிகள் மற்றும் ஏனைய வரிகள் விதிக்கப்படுவதை தவிர்ப்பதற்கான அதன் விதிமுறைகளுக்கு அதில் கைச்சாத்திட்டுள்ள நாடுகள் கட்டுப்பட்டுள்ளதாகவும் புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்த இந்திவர மேலும் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெப-47)

## யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் துறையின் ஏற்பாட்டில் சர்வதேச தாய்மொழித் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத் துறையின் ஏற்பாட்டில் சர்வதேச தாய்மொழித் தினம் நிகழ்வுகள் இன்று நடைபெற்றன.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9.30 மணியளவில் மொழியல் ஆங்கிலத் துறை தலைவர் கவிதா நவகுலன் தலைமையில் இந்த நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன்போது, “தாய்மொழி பற்றிய கருத்தியல்” எனும் தலைப்பில் சிக்காக்கோ பல்கலைக்கழகப் பேராசிரியர் இ.அண்ணாமலை நிகழ்நிலையில் உரையாற்றினார். நிகழ்வில் கலைலப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (அ)

# மரத்தில் கட்டப்பட்டிருந்த 14 பசு மாடுகள் திருட்டு!

சுமார் 22,40,000 ரூபா பெறுமதியான ஆறுமாத பசுக் கன்றுகளுடன் 14 பசு மாடுகள் திருடப்பட்டுள்ளதாக அரலகன்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு திருடப்பட்ட பசுக்களில் 6, 7 மற்றும் 8 மாத வயதுடைய 7 பசுக் கன்றுகள் உள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

அரலகன்வில பகுதியில் கல்தலாவ எனும் கிராமத்தில் வசித்து வருகின்ற தயானந்த சமரவீர என்பவருக்கு சொந்தமான மேற்படி 14 பசு மாடுகளும் மரத்தில் கட்டப்பட்டிருந்த நிலையிலேயே இனங்காணப்படாத நபர்களால் திருடப்பட்டுள்ளதாக அரலகன்வில பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாடுகள் கட்டப்பட்டிருந்த இடத்தில் வாகனத்தின் டயர் தடம் காணப்பட்டதாகவும், திருடர்கள் குறித்த மாடுகளை இந்த வாகனத்தில் திருடிச் சென்றிருக்கலாம் எனவும் பசு மாடுகளின் உரிமையாளர் தயானந்த சமரசிங்க பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரெப-49)

## எழுச்சி பெறுகிறது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது-

“ஜே.வி.பியில் முன்னர் ஐந்து இலட்சம் பேர் இருந்தாலும் அக்கட்சியில் ஒழுக்கக் கட்டுப்பாடு இருந்தது. கூட்டங்களின்போது கூட இராணுவக் கட்டமைப்பு போல் ஒழுக்கம் பேணப்பட்டு வந்தது. ஆனால், ஜே.வி.பி. தற்போது தேசிய மக்கள் சக்தியாகியுள்ளது. அந்தக் கூட்டணியில் இணைபவர்கள் எல்லாம் முன்னைய ஜே.வி.பியினர் போல் செயற்படுவார்கள் எனக் கூற முடியாது.

மொட்டுக் கட்சியில் இருந்து விலகி, ஐக்கிய மக்கள் சக்திக்கு வருவதற்கு வெட்கப்பட்டவர்கள் கூட தேசிய மக்கள் சக்திக்குள் சென்றுள்ளனர்.

மிதக்கும் வாக்குகளில் 30 வீதம் அவர்களுக்குச் (தேசிய மக்கள் சக்திக்கு) சென்றுள்ளது. இளைஞர்களின் வாக்குகளிலும் சிறு வீதம் சென்றுள்ளது. முன்னர் 5 இலட்சம் என்றால் தற்போது 20 இலட்சம். இது பாரிய மாற்றம் என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். மறுபுறத்தில் அன்றைய ஜே.வி.பியில் இருந்த ஒழுக்கத்தை இன்று பேண முடியாது.

நாட்டை ஆள்வதென்பதும் நகைப்புக்குரிய காரணம் அல்ல. அதற்கு அனுபவம் இருக்க வேண்டும். அந்த இடத்துக்கு தேசிய மக்கள் சக்தி வந்துள்ளதா என்பது பிரச்சினையாகும்.” – என்றார். (அ)

## மனோவின் பிள்ளையார் சுழி கதை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றுச்சீட்டுகள் (திருத்தச்) சட்டமூலம் உள்ளிட்ட 9 சட்டமூலங்கள் மீதான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

“இந்திய அரசு மூலம் எமக்கு கிடைத்த வீட்டுத் திட்டத்தை கடந்த 19 ஆம் திகதி நம் அமுல்படுத்தினோம். 43 வீட்டுத் திட்டங்களில் 1300 வீடுகளை அறிமுகப்படுத்தினோம். இது 10 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் முதல் கட்டம். இந்தத் திட்டம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதில் நாம் கட்சி பார்த்து வீடு கொடுப்பதாக சிலர் கூறியிருந்தார்கள். ஆனால், நாங்கள் இன்னும் பயனாளிகள் பட்டியலையே அறிவிக்கவில்லை. அறிவிக்காத பட்டியலுக்கு எப்படி கட்சி பார்த்து வீடு கொடுக்க முடியும்?

எந்த அரசில் கட்சி பார்த்து யார் யாருக்கு வீடுகள் கொடுக்கப்பட்டன என்பது இங்குள்ள அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் நன்றாகவே தெரியும். இங்கு அமர்ந்திருக்கும் வேலுகுமார் எம்.பிக்கும் நன்கு தெரியும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வீடு கொடுக்குமாறு நான் கேட்கவில்லை. 2012 – 2019 இல் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கொடுங்கள் என்றுதான் கூறினேன். எனது கட்சிக்காரர்களுக்கு கொடுங்கள் என்று கூறும் புத்தி எனக்கு கிடையாது.

பயனாளிகள் பட்டியலில் தோட்டத்திலுள்ள சேவையாளர்களுக்கு வீடு கொடுக்க வேண்டும் என்று பெருந்தோட்டத்தொழில் அமைச்சராக இருந்த ரமேஷ் பத்திரவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அவர்களையும் நாம் உள்ளடக்கியுள்ளோம்.

அதுமட்டுமன்றி அங்கேயே படித்துச் சேவை செய்யும் ஆசிரியர்களுக்கு வீடு வழங்கக் கோரியுள்ளோம். மலையகக் கலைஞர்களுக்கும் வீடு கேட்டுள்ளோம். அடுத்ததாக தோட்டத்தில் வேலை செய்தால் வீடு கிடையாது. தோட்டத்தில் பிறந்திருந்தால்தான் வீடு என்ற கொள்கையை உருவாக்கினோம். 2 இலட்சத்து 51 ஆயிரம் குடும்பங்கள் தோட்டத்தில் வாழ்கின்றன.

இதில் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுப் பிரச்சினைகள் உள்ளன. இவ்வாறான நிலையில் தோட்டத்தில் வேலை செய்வது ஒரு இலட்சத்து 15 ஆயிரம் நபர்கள் மட்டும்தான். இன்று (நேற்று) வலப்பனையில் கூட தங்களுக்கு வீடு கிடைக்கவில்லையென ஒரு போராட்டம் நடந்தது. இந்திய அரசால் கிடைத்துள்ள வீடுகளின் எண்ணிக்கை 14 ஆயிரம். அவற்றை முறையில் நாம் பகிர்ந்தளிக்க வேண்டும். ஒரு இலட்சத்து 76 ஆயிரம் குடும்பங்களின் வீட்டுப் பிரச்சினையை இந்த 14 ஆயிரம் வீடுகள் தீர்க்கப் போவதில்லை.

இந்நிலையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், “இந்த 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கு நான்தான் பிள்ளையார் சுழி போட்டேன்” என ஒரு அறிக்கை விட்டிருந்தார். இதனைப் பிள்ளையார் கேட்டால் அவரே அழுவார். பெயர் போடும் அரசியல் செய்ய நான் வரவில்லை. நிரந்தரத் தீர்வுகளைப் பெறவே நான் அரசியலுக்கு வந்தேன்.

பதவி ஆசைக்கு வரும் புத்தியும் எனக்குக் கிடையாது 10 ஆயிரம் வீடுகளையும் நீங்களா கொண்டு வந்தீர்கள். சரி வைத்துக்கொள்ளுங்கள். அதே மாதிரி மலையக மக்களுக்கு பிரஜாவுரிமையை நீங்களா பெற்றுக்கொடுத்தீர்கள் சரி கொடுத்துக்கொள்ளுங்கள். நாளைக்கு ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கியது நான்தான் என்று கூறுவீர்கள். அதில் ஓரளவு உண்மையும் இருக்கலாம்.

நான் அனைவரும் ஒன்றிணைந்து கட்சி பேதமின்றி வேலை செய்வோம் என்றுதான் கூறுகின்றேன். 57 சதவீதமான மலையக மக்கள் தற்போது வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கின்றார்கள். ஆனால், இங்குள்ள 10 மலையக எம்.பி.க்கள் உள்ளுக்குள் சண்டை போட்டுக்கொண்டிருக்கின்றோம். வெளியே வந்த பின்னர் கை குலுக்குகின்றோம். என்ன நியாயம் இது?

இன்று (இன்று) நுவரெலியாவிலும் மலையகத் தமிழர் என்ற அடையாளத்தை வழங்கக் கோரி ஒரு போராட்டம் நடந்தது. எமது அடையாளம் இந்திய வம்சாவளித் தமிழர் என்று இருப்பது எமக்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற அநீதிகளை அங்கீகரிக்கும் ஒரு அடையாளம் என்பது எனது நிலைப்பாடு.

ஆனால், மக்கள் சொல்வதையும் நான் கேட்க வேண்டும் என்பதும் எனது நிலைப்பாடு. எனவே, சிவில் அமைப்புக்கள் மலையகப் பிரதிநிதிகள் எல்லோரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி தனி அடையாளக் கோரிக்கையை ஒற்றுமையாக ஜனாதிபதியிடம் முன்வைப்போம்.” – என்றார். (அ)






உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அட்டாளைச்சேனை பாடசாலை மாணவர்கள் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு விஜயம்



(நூருல் ஹுதா உமர்)

பல்கலைக்கழக அறிவுசார் வளங்களை சூழவுள்ள மாணவர்களும் தங்களது அறிவு விருத்திக்கும் வலுவூட்டலுக்கும் பயன்படுத்த அனுமதிக்கும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உயரிய சிந்தனையின் கீழ், உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் அனுமதியுடன் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் கலை கலாசார பீடம் மற்றும் அஷ்ரப் ஞாபகார்த்த நூலகம் உள்ளிட்ட பல்வறு இடங்களை பார்வையிட்டதுடன் கலை கலாச்சார பீடத்தில் இடம்பெற்ற அறிவுசார் செயலமர்விலும் கலந்துகொண்டனர்.

கலை கலாசார பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அறிவுசார் செயலமர்வில் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் பிரதான வளவாளராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்வின்போது கலை கலாசார பீட சமூகவியல் துறையின் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப் மாணவர்களின் உளவள விருத்தியோடு சம்பந்தப்பட்ட உரையை ஆற்றினார்.

மாணவர்களுடன் பாடசாலையின் உதவி அதிபர் எம்.ஜெ.எம். அன்வர் நௌஷாட், உதவி அதிபர் ஏ.ஆர்.எம். ஆஷிக், பகுதித்தலைவர் ஏ.எம். ஜெஸீல் மற்றும் ஆசிரியர், ஆசிரியைகளான எம். நியாஸ், ஏ.எம். சித்தீக், எம்.ஏ.சி.எம். றவூப், எம். றிஸ்லி, ஏ.சி. நிலுபா, எஸ். றுமானா மற்றும் ஏ.ஏ. நாதியா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# காரைதீவில் பால் நிலை சமத்துவம் தொடர்பான கலந்துரையாடல்



(எம்.எம்.நம்ஸீன்)

பால் நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் காரைதீவில் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு பால்நிலை தொடர்பான பிரச்சினைகள் இனம் காட்டப்பட்டு இதற்கான தீர்வு தொடர்பான முன்வைப்புக்களும் பலராலும் முன்வைத்து கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் மற்றும் பல்வேறு சமுக அமைப்புக்களின் பிரதி நிதிகள், சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸ் நிலைய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# “வளிமண்டலவியல் ஓர் அறிமுகம்” கொழும்பில் நூல் வெளியீட்டு விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

முஹம்மட் சாலிஹீன் எழுதிய ”வளிமண்டலவியல் ஓர் அறிமுகம்” என்ற நூல் வெளியீட்டு விழா இம் மாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இலங்கை வளிமண்டலவியல் கேட்போர் கூடத்தில் நூலாசிரியரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன், உயர் நீதிமன்ற நீதிபதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ், புரவலர் ஹாஸிம் உமர் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக கொழும்பு பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவி பேராசிரியை பரீனா றுசைக், அமானா வங்கி பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் முஹம்மட் அஸ்மிர், சுங்க திணைக்கள மேலதிக பணிப்பாளர் சம்சுதீன் நியாஸ் ஆகியோரும், விசேட அதிதிகளாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிப் பணிப்பாளர் யூ.எல்.யாக்கூப், சிரேஸ்ட அறிவிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், மௌலவி எம்.ஆர்.அப்துல் றஹ்மான், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜௌபர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது நூலின் முதல் பிரதியை புரவலர் ஹாஸிம் உமர் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

# வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர் மயங்கி விழுந்து பரிதாப மரணம்

யாழ்ப்பாணத்தில் மயங்கி விழுந்த ஆசிரியர் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியரான கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த ஞானசம்பந்தர் மில்ரன் (வயது 32) எனும் ஆசிரியரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி ஆசிரியர் கடந்த வாரம் திடீரென மயங்கி விழுந்துள்ளார். அதையடுத்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)



# மிதி வெடி

*போன கிழமையும், இந்தக் கிழமையும் ஒரே வேலை. கடுமையான இழுபறி. காரியம் இன்னும் முடிஞ்ச பாடில்ல.*

*பேரப் பிள்ளைக்கு “அட்மிஷன்” எடுக்கிறதுக்கு அலைஞ்சு திரிஞ்சது தான் மிச்சம். 150 “மார்க்ஸ்” எடுத்துப் பாஸ் பண்ணியும், இங்க உள்ள பள்ளிக் கூடத்துக்கு “அட்மிஷன்” எடுக்க முடியாமல் கிடக்கு. கதைச்சுப் பேசி ஏதும் செய்வம் எண்டு அதிபரைச் சந்திக்கவெண்டு போனா வாசலில கட்டி வைச்சிருக்கிறவையச் சமாளிச்சு அவரைச் சந்திக்கவே முடியேல்ல... ரெண்டு கிழமையாத் திரியுறன்.*

*அரசாங்கம் வைக்கிற அஞ்சாம் ஆண்டு “ஸ்கொலசிப்” பரீட்சையால ஒரே அல்லோல கல்லோலம். பிள்ளையள் பாவம். ஒண்டுக்கும் உதவாத இந்தச் சோதினையால கனக்கக் குழப்பம் பாருங்கோ... பிள்ளைக்குச் சோதினை எண்டது தான் பேர், பிள்ளையளை வைச்சு “ரேசிங் கோர்ஸ்” - அதானுங்கோ குதிரையில பந்தயம் கட்டுறது போல அப்பா, அம்மா மார் தானே பந்தயம் கட்டினம்.*

*பத்து வயசுப் பிள்ளையளைப் படுத்துற பாடு இருக்குதே.. சொல்லி மாளாது. ஆ..ஆ வெண்டு அம்பத்தெட்டு ரியூசன். அவன் அவ்வளவு “மார்க்ஸ்” எடுக்கிறான் - இவன் இவ்வளவு “மார்க்ஸ்” எடுக்கிறான் எண்டு பிள்ளையளுக்குள்ள ஒப்பீடு செய்து பெற்றோர் அதுகளைப் பாடாப்படுத்தினம்.*

*நெருக்கிப் பிடிச்சுப் பிள்ளையப் “பாஸ்” பண்ண வைச்ச பின்னும், “அட்மிஷன்” கிடைக்கேல்ல எண்டா.... அதுக்கும் இடி வாங்குறது அப்பாவிப் பிள்ளை தான்.... “அவனைப் பார் 165 எடுத்ததால பிரச்சினை இல்லாமல் இருக்குதுகள்... நீயும் இருக்கிறியே... ஒரு ரெண்டு “மார்க்ஸ்” கூட எடுக்கேலாதே உன்னால......?*

*பாஸ் பண்ணாத பிள்ளைக்கு பாஸ் வரேல்ல எண்ட கவலை.... வெட்டுப் புள்ளியை எட்டிப் பிடிச்சாலும், “அட்மிஷன்” கிடைக்கேல்லையே எண்டது இங்க அப்பா - அம்மான்ர கவலை..... அதிலும் உந்த அரசாங்க உத்தியோகம் பாக்கிற அப்பா - அம்மா படுற பாடு இருக்கே... ஐயோ... ஐயோ....! உங்களுக்குத் தான் புலமைப் பரிசில் காசு வரப்போறதில்லை.... அவனை, இவனைப் பிடிச்சு “அட்மிஷன்” எடுத்துப் போடுவியள், பிறகேன் இப்பிடிக் கொதிக்கிறியள்...?*

*ஒரு வருசமோ, ரெண்டு வருசமோ எங்கையாலும் ஊர்ப் பள்ளிக் கூடத்தில போடுங்கோ... அப்பத் தான் சுகமா “லீவிங் சேர்ட்டிபிஃகேற்” எடுக்கலாம்... அதைவிடப் பிள்ளை எப்பவும் வகுப்பில முதலாம் பிள்ளை தான் எண்டு “ரிப்போர்ட்” டும் தருவினம்....*

*அதை - இதைக் குடுத்து, “அட்மிஷன்” எடுக்கிற பிள்ளை “ஓஎல்” சோதனையில ஆறு பாடம் “பாஸ்” பண்ணுறதே அபூர்வம்.... காசு வாங்கிக் கொண்டு சேர்த்த அதிபர் போயிடுவார்.... கடமையில இருக்கிற அதிபருக்கு அந்த நேரத்தில அதுவும் தலையிடியா இருக்கும்!*

*ஆறாம் தரத்துக்கும், முதலாம் தரத்துக்கும் பிள்ளைய அனுமதிக்கிறதெண்டா எல்லா இடமும் பிரச்சினை தான். பிரச்சினை எண்டதைத் தாண்டி, குடுக்கிறதைக் குடுத்தால் எல்லாம் கமுக்கமா நடக்கும் எண்டுறாங்கள். என்ரை பேத்தி “ஸ்கொலசிப்” பாஸ் பிறகேன் நான் அவரை இவரைக் கவனிக்க வேணும்? அதை - இதைக் குடுக்க வேணும்?*

*முதலாம் தர அனுமதியும் அப்பிடித் தான் பாருங்கோ..... அச்சுவேலியில கட்டுற வீட்டுக்கு அஞ்சு “லோட்” கல்லுப் பறிச்சாத் தான் “அட்மிஷன்” தருவன் எண்டு அடம்பிடிச்ச அதிபர் இருந்த ஆரம்பப் பள்ளிக்கு எப்பவும் மவுசு தான். காசா வாங்காமல் பொருளாய் வாங்கின காலம் போய் இப்ப மணிக்கூட்டுக் கடையில மணியை “செற்றில்” பண்ணினால் மறுகதை இல்லாமல் “அட்மிஷன்” கிடைக்குதாம்.*

*அயலுக்குள் இருப்பவருக்கு முன்னுரிமை எண்டதெல்லாம் சும்மா கதைக்குத் தானாம்....! பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்துச் சந்தியில சந்ததி சந்ததியா இருக்கிறவைக்கு அனுமதி இல்லை. ஆனால், ஆறேழு கட்டைக்கு அங்கால இருந்து வாறவைக்கு “அட்மிஷன்” குடுபட்டிருக்கு. எல்லாம் பண(தன)மயம் பாருங்கோ.....*

*“எங்களுக்கும் அட்மிஷனுக்கும் சம்பந்தமில்லை.... எல்லாம் டிப்பாற்மென்ற் தான் செய்யுது” எண்டு கையைக் காட்டிப் போட்டுத் தப்பப் பாக்கினம். ஆனா... இவையின்ர “செயார்” தான் டிப்பாட்மென்ற் வரை வேலை செய்யுது எண்டது ஊரறிஞ்ச விசியம். பள்ளிக் கூடங்களில “அட்மிஷன்” எடுக்க மட்டும் தான் காசு. ஆனால் “டிப்பாட்மென்ற்” றில “ட்ரான்ஸ்பஃர்” எண்டால் காசு.... “க்ளைம்” எண்டால் காசு.... அப்பிடி, இப்பிடி எண்டு எல்லாம் பணம் தான்.*

*இது பிள்ளையளின்ர பிரச்சினை.... மறு புறத்தில பள்ளிக் கூடத்தில இருந்து கொண்டு பகட்டாக வாழ நினைக்கிற ஆசிரியர்மாராலையும், பள்ளிக் கூடத்தை வைச்சுத் தங்கட அரசியலைக் கொண்டு நடத்திற பழைய மாணவர்களாலையும் வேற மாதிரிப் பிரச்சினை....*

*இண்டைக்கு எனக்கு 58 வயசாகுது. நான் அறிஞ்ச காலந்தொட்டு இங்க இருக்கிற எந்தப் பள்ளிக் கூடத்திலையும் பழைய மாணவர்கள் பள்ளிக் கூடத்தோட சேர்ந்து போனதாச் சரித்திரமே இல்லை.*

*ஒரு அதிபர் பள்ளிக் கூடத்துக்குப் புதுசா வரேக்க மட்டும், குனிஞ்சு கும்பிடு போட்டு - குழைஞ்சு நெளிஞ்சு நிக்கிற பழைய மாணவர்கள், காலப் போக்கில தங்கட தாளத்துக்கு அதிபர் ஆடேல்ல எண்டா அவரை அழ வைச்சு அனுப்புறது தான் இங்கத்தைப் பாரம்பரியம் பாருங்கோ.....*

*தான் நினைச்சதைப் பள்ளிக்கூடத்துக்குள்ள செய்ய முடியாமல் போனால் அதிபர் “கள்ளன்”. அதுக்குப் பிறகு தனக்கேற்ற ஆக்களோட “குறூப்” சேர்ந்து நிண்டு கொண்டு அளப்பறை தான். ஒருத்தன் தாங்கள் நினைச்சதுக்குச் சரிப்பட்டு வரேல்ல எண்டால், அவனைக் கள்ளன் எண்டுறதுக்கு எங்கட ஆக்களைக் கேட்டுத் தான்...!*

*லஞ்சம் எண்டுவினம்.... ஊழல் எண்டுவினம்.... ஆக மிஞ்சிப் போனால் “பொம்பிளைக் கள்ளன்” எண்டுவினம்.... அதுக்காண்டி உங்கினேக்க பள்ளிக் கூடங்களில மோசடி செய்து “பேர்” வாங்கியிருக்கிற ஆக்கள் எல்லாம் உத்தமர் எண்டும் இல்லைப் பாருங்கோ....*

*நித்திலத்தின் மத்தியில இருக்கிற பள்ளிக் கூடத்துக்கு ஒரு பொம்பிளையைப் “பிரின்சிப்பல்” ஆக்கிப் போட்டினம் எண்டு திங்கக் கிழைமையில இருந்து ஒரே அக்கப்போர்......*

*ஆர் அதிபரா வந்தா உங்களுக்கென்ன...? இப்ப அஞ்சாறு மாதமா அதிபரே இல்லாமல் இருந்தனியள் தானே?*

*உங்கட அயலுக்கை இருக்கிற பொம்பிளைப் பள்ளிக் கூடத்துக்கு அதிபராப் போடுறதுக்கு தகுதியுள்ள பொருத்தமான பொம்பிளயள் ஒருத்தரும் இல்லையாம் எண்டு “டிப்பாற்மென்ற்” காரர் கதைக்கினம்... இப்ப இருக்கிறவா இன்னும் கொஞ்சக் காலத்திலை போகப் போறா.... அந்த நேரம் ஆம்பிளை அதிபரைப் போடேக்க என்ன செய்யப் போறியள்? பொறுத்திருந்து தான் பாக்கவேணும்....*

*மார்பில் “மணி” அணிந்த “மாறனே” துணை நமக்கு!*

*-நரமுனி-*

# தெற்குலக நாடுகளில் மேம்பாட்டுத் திட்டங்கள் 10 லட்சம் டொலர்களை வழங்கியது இந்தியா!

வளரும் தெற்குலக நாடுகளில் வறுமை மற்றும் பட்டினியை ஒழிப்பதற்கான திட்டங்களை மேற்கொள்வதற்கு இந்தியா, பிரேஸில், தென்னாபிரிக்கா இணைந்து உருவாக்கிய 'ஐபிஎஸ்ஏ நிதிக்கு' இந்தியாவின் பங்களிப்பாக 10 லட்சம் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

வளரும் தெற்குலக நாடுகளில் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த இந்தியா, பிரேஸில் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய 3 நாடுகளும் இணைந்து ஆண்டுதோறும் தலா 10 லட்சம் டொலர்களை கூட்டுறவு மற்றும் ஆதரவின் உணர்வில் பங்களிக்க ஐபிஎஸ்ஏ நிதி உருவாக்கப்பட்டது.

உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல், எச்ஐவி - எய்ட்ஸ் தொற்று சிக்கல்களுக்கு தீர்வு காணுதல், ஆரோக்கியமான குடிநீருக்கான அணுகலை விரிவுபடுத்துதல் என்று நீடித்த வளர்ச்சி இலக்குகளை (எஸ்டிஜி) அடைவதில் பங்களிக்கும் திட்டங்களுக்கு ஐபிஎஸ்ஏ நிதி ஆதரவு அளிக்கிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 2006 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டுக்கு வந்த ஐபிஎஸ்ஏ நிதிக்கு இந்தியா இதுவரை 1.8 கோடி டொலரை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. தெற்குலகின் 37 நாடுகளில் 45 திட்டங்களுக்கு இதுவரை 5.06 கோடி டொலர் ஐபிஎஸ்ஏ நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.



அந்தவகையில், இந்த ஆண்டின் இந்தியாவின் பங்களிப்பான 10 லட்சம் டொலருக்கான காசோலையை தெற்கு - தெற்கு நாடுகள் ஒற்றுமைக்கான ஐ.நா.சபை அலுவலக இயக்குநர் திமா அல் காதிப்பிடம் ஐ.நா.வுக்கான இந்தியத் தூதர் ருச்சிரா கம்போஜ் திங்கட்கிழமை நேரில் வழங்கினார்.

அப்போது, தூதர் கம்போஜ் கூறுகையில், இந்தியாவின் ஜி-20 தலைமையின் நோக்கமானது 'மக்களால், மக்களுக்காக, மக்களின் வளர்ச்சி' என்பதேயாகும். அதன்படி, தெற்குலகில் உள்ள கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் இந்த நிதி சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தெற்கு நாடுகளிடையே ஒத்துழைப்பு உணர்வை வலுப்படுத்தியுள்ளது. இதனால், ஐபிஎஸ்ஏ நிதிக்கு ஆதரவளிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது, என்றார். (04)

# உளவுக் குற்றச்சாட்டில் கைதான அமெரிக்கரின் ரஷ்ய சிறைக் காவல் மார்ச் இறுதி வரை நீடிப்பு

ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் உள்ள நீதிமன்றம், உளவுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அமெரிக்க செய்தியாளரின் சிறைக் காவலை மார்ச் இறுதி வரை நீடித்துள்ளது.

அமெரிக்காவின் வோல் ஸ்டீரிட் நிறுவனத்தின் செய்தியாளரா எவான் கெர்ஷ்கோவிச், 2023 மார்ச் மாதம் ரஷ்யாவில் உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டார்.


இந்தக் குற்றச்சாட்டை எவான் கெர்ஷ்கோவிச்சும், வோல் ஸ்டீரிட் செய்தி நிறுவனமும் அமெரிக்க அரசு அதிகாரிகளும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

முன்னதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், தாங்கள் எவானை விடுவிக்க தயாராக இருப்பதாக தெரிவித்தார். மேலும், அரசின் ரகசியத் தகவலைப் பெற முயன்றபோது கையும் களவுமாக எவான் பிடிபட்டதாகவும் இந்த சிறப்புச் சேவை எட்டப்பட சில நிபந்தனைகள் உள்ளன எனவும், அந்த உடன்படிக்கை விரைவில் எட்டப்படும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.



புடின் மறைமுகமாக குறிப்பிடுவது அமெரிக்காவின் நட்பு நாடான ஜேர்மனியில் சிறையில் உள்ள ரஷ்யரை விடுவிக்கத் தான் எனக் கூறப்படுகிறது.

உக்ரைன் போர் விவகாரத்தில் அமெரிக்க மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பெரும் பதட்டம் நிலவி வரும் சூழலில் அமெரிக்கச் செய்தியாளரின் சிறைக் காவல் நீடிக்கப்பட்டுள்ளமை கவனத்தை ஈர்த்துள்ளது. (04)




# ஆசியாவின் மிகப் பெரிய விமான கண்காட்சி சிங்கப்பூரில் ஆரம்பம்!

ஆசியாவின் மிகப் பெரிய விமானக் கண்காட்சி சிங்கப்பூரில் நேற்று தொடங்கியது. உலகின் 50 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கின்றன.

முதல் நாளான நேற்று செவ்வாய்க்கிழமை சீனாவைச் சேர்ந்த கோமாக் மற்றும் அமெரிக்காவின் போயிங் நிறுவனங்களின் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற சிங்கப்பூர் விமானக் கண்காட்சியில் ரஷ்ய நிறுவனங்கள் இடம் பெற்றிருந்தன. ஆனால், உக்ரைன் போர் நடைபெற்று வரும் சூழலில் இந்தாண்டுக் கண்காட்சியில் அந்த நாட்டிலிருந்து ஒரு நிறுவனம் கூட பங்கேற்கவில்லை.

ஆனால், காஸா போர் தீவிரமாக நடைபெற்றும் சூழலிலும் இந்தக் கண்காட்சியில் இஸ்ரேலிய நிறுவனங்கள் பங்கேற்று தங்களது தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தியுள்ளன. (04)

# தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி? மக்கள் நீதி மய்யத் தலைவர் கமல் பதில்!



நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி வைக்கப்படுமா? என்ற கேள்விக்கு மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் பதிலளித்துள்ளார்.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள மக்கள் நீதி மய்யம் தலைமை அலுவலகத்தில் கட்சியின் 7 ஆம் ஆண்டு விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த விழாவின்போது, கட்சியின் தலைவர் கமல்ஹாசன் செய்தியாளர்களைச் சந்தித்து அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

அப்போது விஜய் முழு நேர அரசியலுக்கு வருவது குறித்தும், அவருடன் கூட்டணி குறித்துமான கேள்விக்கு, "சினிமாவைவிட்டு முழு நேர அரசியலில் இறங்குவது அவர் இஷ்டம். அது அவரின் பாணி. நான் விஜய்யுடன் ஏற்கெனவே பேசியுள்ளேன். அவர் அரசியலுக்குள் நுழைந்ததும் முதல் வரவேற்பு என்னுடையதாகதான் இருந்தது" என்று கமல் பதிலளித்தார்.

மேலும், கூட்டணி குறித்த பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும், இறுதியானவுடன் அறிக்கை வெளியிடப்படும் என்றும் கமல் தெரிவித்தார். (04)

# விற்பனை விதிமுறைகளை மீறுகிறது டிக்டொக்! இந்தோனேசிய தொழிலமைச்சர் குற்றச்சாட்டு

செயலி வழியாக பொருட்கள், சேவைகள் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கும் இந்தோனேசியாவின் விதிகளை வீடியோ செயலியான டிக்டொக் தொடர்ந்து மீறிவருவதாக அந்த நாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் பொருட்கள் விற்கப்படுவதை இந்தோனேஷிய அரசு, பயனர்களின் தகவல் பாதுகாப்பு கருதியும் சிறு விற்பனையாளர்களின் நலன் கருதியும் தடை செய்தது.

டிக்டொக் அறிமுகப்படுத்திய டிக்டொக் ஷொப் என்கிற இணைய விற்பனைச் சேவை இதனால் கடந்த ஆண்டு முடக்கப்பட்டது.

ஆயினும், இந்தோனேஷியாவின் மிகப்பெரிய இணைய விற்பனை நிறுவனமான டோகோபிடியாவின் 75.01 சதவிகித பங்குகளை டிக்டொக்கின் தாய் நிறுவனமான சீனாவின் பைட் டான்ஸ், டிசம்பரில் வாங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், இந்தோனேசிய சிறு, குறு தொழில் துறை அமைச்சர் டெடென் மஸ்டுகி, டிக்டொக் தொடர்ந்து விதிமீறலில் ஈடுபடுவதால் நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (04)

# ஏறாவூரில் மாணவர்கள் கௌரவிப்பும் சேவை நலன் பாராட்டு விழாவும்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் அதி திறமைச் சித்திகளைப் (9ஏ) பெற்று சாதனை படைத்த ஏறாவூர் கோட்டப் பாடசாலைகளின் 34 மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீரின் சேவையைப் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

ஏறாவூர் ஓய்வு நிலை அதிபர்கள் சங்கத்தினரால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட இந்நிகழ்வுகள், சங்கத்தின் தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.அபுல்ஹசன் தலைமையில் நடைபெற்றன.

மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர், ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் திருமதி. நிஹாறா மௌஜூத் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி வலயக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி. எம்.ஜே.எப்.றிப்கா, எம்.எச்.எம்.றமீஸ் மற்றும் ஏறாவூர் நகர் பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திருமதி சிஹானா ருசைட் ஆகியோரும் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

சிறப்பு அதிதிகளாக ஏறாவூர் ப.நோ.கூ.ச.தலைவர் எம்.எல். அப்துல் லத்தீப், ஏறாவூர் றபீக் ஸ்டோர்ஸ் உரிமையாளர் ஏ.எம்.எம்.சபீக் ஆகியோர் கலந்து கொண்டதுடன் ஏனைய அதிதிகளாக ஏறாவூர் கோட்டப்பாடசாலைகளின் அதிபர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.




# யூரீவி நடாத்திய கிராத் போட்டி மாணவர்களுக்கான பரிசளிப்பு

நாடளாவிய ரீதியில் யூரீவி நடாத்திய கிராத் போட்டியில் முதலாம், 2ஆம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை (17) மூதூர், ஸஹ்ரா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்து உரையாற்றினார்.

இதன்போது, மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதி அமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ரூப், அரசியல் அதிகார சபை உறுப்பினர் னுச. ஹில்மி மொஹிடீன், மூதூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஹரீஸ், சட்டத்தரணி முஹம்மட் மற்றும் முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்பட ஊர்ப்பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) தரம் 6 க்கு புதிதாக இணைத்துக்கொள்ளும் மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான் தலைமையில் இன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர் எம்.பி.எம்.றாஜி, அல்-ஹிக்மா ஜூனியர் பாடசாலையின் பொறுப்பதிபர் எம்.எல்.எம்.மஹ்றூப், அண்மையில் இப்பாடசாலையில் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட எம்.சிராஜ், ஏ.கே. பாரீஸ், உட்பட ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அல்-ஹிக்மா ஜூனியர் பாடசாலையில் இருந்து சுமார் அறுபதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஷம்ஸ் மத்திய கல்லூரியில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# தம்பலகாமம் பிரதேச செயலக காலாண்டு கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்)

தம்பலகாமம் பிரதேச செயலக 2023 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான பிரதேச கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று (20) பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் வெளிக்கள உத்தியோகத்தர்களினால் முன்னெடுக்கப்பட்ட பல விடயங்கள், களவிஜயம், வேலைத் திட்டம் போன்றவை தொடர்பில் ஆராயப்பட்டிருந்தன.

இதில் மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல்.மஹ்ரூப் கலந்துகொண்டு கூட்டத்தை வழிநடாத்தினார். உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர, கிளைத் தலைவர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# பெண் விரிவுரையாளர் லொறி மோதி மரணம்!

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் உதவி விரிவுரையாளரான 27 வயதான யுவதி லொறி மோதி உயிரிழந்துள்ளார். பத்தரமுல்லை, விக்கிரமசிங்கபுர சந்தியில் பாதசாரி கடவைக்கு அருகில் வீதியைக் கடக்கும்போது அவர் மீது லொறி மோதியுள்ளது.

பத்தரமுல்லை, விக்கிரமசிங்கபுர, 10ஆவது லேனில் வசித்து வந்த லக்மினி போகமுவ என்ற 27 வயதுடைய விரிவுரையாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் நேற்று விக்கிரமசிங்கபுரவிலிருந்து வேலைக்குச் செல்வதற்காக பாதசாரி கடவைக்கு அருகில் வீதியின் மறுபுறம் சென்றபோது பத்தரமுல்ல - பெலவத்தையிலிருந்து தலவத்துகொட நோக்கிச் சென்ற லொறியின் முன்பகுதி மோதியுள்ளது.

2017ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இரண்டு பதக்கங்களையும் புலமைப்பரிசில்களையும் பெற்று சிறந்த மாணவியாக அவர் தெரிவானார்.

நடனம், பாடுதல் மற்றும் இசைக்கருவிகளை வாசிப்பதில் அவர் திறமையானவர். கொழும்பு பல்கலைக்கழகம், பத்தரமுல்ல கலைப்பீடத்தின் சர்வதேச உறவுகள் பிரிவில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றிய அவர், களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சந்திரசிறி போகமுவவின் ஒரேயொரு பிள்ளையாவார்.



# இடை நடுவில் கைவிடப்பட்ட வடசல் பாலம் போக்குவரத்துப் பிரச்சினையில் மக்கள்

(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பூவரசந்தீவையும் - கல்லடி வெட்டு வானையும் இணைக்கும் வடசல்பாலம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இதனால், அப்பிரதேச மக்கள் பல் வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

2021.10.16 ஆம் திகதி அன்று இப்பாலத்துக்கான அடிக்கல் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக்கினால் அடிக்கல் நடப் பட்டது.

ஆறு மாதத்துக்குள் பணிகள் முடிந்துவிடும்!, என மக்களிடம் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் இன் னும் அவை நிறைவேற்றப்படவில்லை எனவும், இதன் காரணமாக இப்பகுதியில் பயணிக்கும் ஆறு கிராமங் களைச் சேர்ந்த மக்கள் கடும் பிரச்சினைகளை எதிர் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயம், சிறு மீன்பிடி தொழில் என பல தேவை யான முக்கிய அன்றாட ஜீவனோபாயத்துக்காக மக்கள் ஆற்றைக் கடந்தே செல்ல வேண்டியுள்ள நிலையில், மூன்று வருடங்கள் கடந்து நான்காவது வருடம் ஆரம் பித்த போதிலும் மக்கள் போக்குவரத்து செய்வதற்கான ஏற்ற வகையில் பாலப்பணிகள் இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. இதனை பூரணமாக்கி வீதியை அமைத்து மக்கள் பாவனைக்கு கையளியுங்கள் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பாலத்தின் சில பகுதிகள் முடிவடைந்த போதிலும் இரு புறத்திலும் உள்ள வீதிகள் செப்பனிடப்படவில்லை, இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியவில்லை, என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

பூவரசம் தீவிலிருந்து கல்லடி வெட்டுவானுக்கு செல் லும் மக்கள் பல்வேறு சிரமங்களை இதனால் எதிர் நோக்கி வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் வியாபாரிகள், கர்ப்பிணித் தாய்மார்கள், நோயாளிகள் உட்பட பலரும் இப்பாலம் செப்பரிடப்படாததனால் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.



இது தொடர்பில் இதனை முன்னெடுத்த வீதி அபிவி ருத்தி அதிகார சபையின் திருகோணமலை பிரதான பொறியியலாளர் அலுவலகத்திடம் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலமாக வினவிய போது, கிடைக்கப் பெற்ற பதிலில் - கிண்ணியா பிரதேச சபைக்கு உட்பட்ட வடசல் பாலமானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் **Rural Bridge Construction unit** இரத்மலானை பிரிவின் ஊடாக நேரடியான கண்காணிப்பில் பால வேலைகள் நடைபெற்றதால் அங்கு தகவல் பெறுமாறும் தெரிவிக் கப்பட்டுள்ளது. அதன் பினன்ர், இரத்மலானை பிரீல் தகவல் அறி யும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் விபரம் கோரப்பட்ட போதும் ஒரு மாதம் கடந்தும் பதில் கிடைக்க வில்லை, என்று தெரிவிக்கப்படுகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் உரிய தகவல் தங்களிடம் இல்லாத பட்சத்தில் குறித்த கோரிக்கை கடிதத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபையே உரிய பகுதிக்கு அனுப்ப வேண்டும். ஆனாலும் இவர்களின் நடைமுறைச் சிக்கல் காரணமாக இவ்வாறு இழுத்தடிப் புச் செய்யப்பட்டு பால நிர்மாண வேலைகள் இழுத்தடிக் கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பாலத்தை செப்பனிடு வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.






# ஜப்பான் தூதரக பிரதிநிதிகளுடன் எம்.எஸ்.தௌபீக் எம்.பி சந்திப்பு



(எஸ்.சினீஸ் கான்)

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதரகப் பிரதிநிதிகளுக்கும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்றகும் இடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்தில் இன்று புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது சமகால அரசியல் விவகாரம் தொடர்பாக முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும் தற்போதைய நிலைமைகள் சம்மந்தமாகவும் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் பேசப்பட்டது.

இந்தச் சந்திப்பில், திருகோணமலை மாவட்டத்திற்கு உதவுவதற்கு தாம் தயாராக இருப்பதாக ஜப்பான் நாட்டு தூதரக பிரதிநிகள் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் அல் - ஹிக்மா பவுண்டேசனின் தலைவர் இபாதுல்லாஹ் மௌலவியும் கலந்துகொண்டார்.



# பாலமுனை மக்களின் பிரச்சினைகள் முஷாரப் எம்.பி. கலந்துரையாடல்

(எம்.எம்.றம்ஸீன்)

பாலமுனை பிரதேசத்திற்கான இணைப்பாளர் பீ.எம்..ஹுசைரின் அழைப்பின் பேரில் பாலமுனைக்கு வருகை தந்த கௌரவ திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பாலமுனை பிரதேசத்தில் உள்ள விளையாட்டு கழகங்கள், பாலமுனை - 2 ரியாழுல் ஜன்னா ஜும்மா பள்ளிவாசல் மற்றும் ஜம்மியத்துல் உலமா பாலமுனை கிளை, விவசாய அமைப்புகள் போன்றவற்றின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

இப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு தீர்வை பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.02.2024 இல் வெளியிடப்பெற்றது.